விடுதி அமைத்து உதவிட வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இரண்டு தனியார் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கல்லூரி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக ஸ்ரீவில்லிபுத்தூரில் அரசுக் கல்லூரி மாணவர்கள் விடுதி ஒன்று அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது குறித்து, விருதுநகர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலர்களிடமிருந்து உரிய கருத்துருவினைப் பெற்று, ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு நவீன வசதியுடன்கூடிய கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

2018 ஜூலை 3] **[பேரவைத் தலைவர்]**

உட்காருங்கள். விதி 110-ன்கீழ் அறிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அளிக்க இருக்கின்றார். பிறகு பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிக்கைகள் வர இருக்கின்றன. உட்காருங்கள். பிறகு பேசலாம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் பேச இருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு) வாய்ப்பைப் பற்றி பிறகு பார்க்கலாம். இப்போது உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கும் வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. அதன் அடிப்படையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் 10 சார்—பதிவாளர் அலுவலகங்கள் நவீன வசதிகளுடன்கூடிய அலுவலகங்களாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) ஹஜ் பயணத்திற்கு மானியம், பிற்படுத்தப்பட்டோர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல், விடுதிகளுக்கு பராமரிப்புப் பணிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளைத் தரமுயர்த்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. மத்திய அரசு ஆண்டுதோறும் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமிய சமூகத்தினருக்கு மானியம் அளித்து வந்தது. இந்த மானியத்தை 2018 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு நிறுத்தியுள்ளது. இந்துக்களுக்கு மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல வழங்கப்படும் மானியத்தைப் போலவும், சிறுபான்மையின